**தமிழ்நாடு பள்ளிக்கல்வி இயக்குநரின் செயல்முறைகள், சென்னை–6**
**ந.க.எண்: 081237/எம்/இ1/2018 , நாள்: .12.2018**

பொருள்:– பள்ளிக் கல்வி – குழந்தைகள் நலம் – பெண் குழந்தைகளின் சமூக முன்னேற்றத்திற்காக ஒவ்வொரு ஆண்டும் தேசிய பெண் குழந்தை தினமான ஜனவரி 24 இல் மாநில் அரசின் விருது வழங்கிட கருத்துரு சமூக நலத்துறையின் மூலம் கோரப்பட்டதற்கிணங்க அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கும் அறிவுரை வழங்குதல் – சார்பு.

பார்வை:–
1. சமூக நல இயக்குநர், சைதாப்பேட்டை, சென்னை – 15, அவர்களிடமிருந்து பெறப்பட்ட கடிதம் ந.எண்.17670/குந–2/2018, நாள்:11.12.2018
2. அரசாணை (நிலை ) எண்:64 , சமூக நலம் , மற்றும் சத்துணவுத் திட்டம் (ச.ந5) துறை, நாள்: 18.09.2017
3. அரசாணை (நிலை ) எண்:185 , சமூக நலம் , மற்றும் சத்துணவுத் திட்டம் (ச.ந5) துறை, நாள்: 09.10.2018

******

பார்வை (3)–ல் காணும் அரசாணையின்படி , பெண் குழந்தைகளின் சமூக முன்னேற்றத்திற்கு சிறப்பாக பணியாற்றும் 18 வயதிற்குட்பட்ட பெண் குழந்தைகளுக்கு ஒவ்வொரு ஆண்டும் தேசிய பெண் குழந்தை தினமாக ஜனவரி 24 –ல் மாநில அரசின் விருதுக்கான காசோலை ரூ.1,00,000/– மற்றும் பாராட்டு பத்திரம் வழங்கிட அனுமதித்து ஆணையிடப்பட்டுள்ளதன் அடிப்படையில் அரசாணையில் குறிப்பிடப்பட்டுள்ள தகுதிகளின் அடிப்படையில் சாதனை புரிந்த பெண் குழந்தைகளின் பெயரினை கீழ்க்காணும் தகுதிகள் அடிப்படையில் பரிந்துரை செய்து அனுப்பி வைக்கும் பொருட்டு அனைத்து மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர்களுக்கும் அறிவுறுத்தலாகிறது.

| | | |
|---|---|---|
| 1 | தகுதிகள் | 1. 5 வயதிற்கு மேல் 18 வயதிற்குட்பட்ட தமிழகத்தில் வசிக்கும் பெண் குழந்தை ( 31 டிசம்பர் ) அன்றைய வயது.<br>2. கீழ்க்கண்டவற்றில் வீர தீர செயல் புரிந்திருக்க வேண்டும்.<br>➢ பெண் கல்வி<br>➢ பெண் குழந்தை தொழிலாளர் ஒழிப்பு<br>➢ பெண் குழந்தை திருமணத்தை தடுத்தல்<br>➢ வேறு ஏதாவது வகையில் சிறப்பாக / தனித்துவமான சாதனை செய்திருத்தல்<br>➢ சமூக அவலங்கள் மற்றும் அதனை தீர்வு காண்பதற்கு புத்தகங்கள் மற்றும் கையேடுகள் எழுதி வெளியிட்டிருத்தல்<br>➢ ஆண்கள் மட்டுமே சாதிக்க முடியும் போன்ற செயல்களை பெண்களாலும் சாதிக்க முடியும் என்று சாதித்திருத்தல் |
| 2 | விருது | மாநிலத்தில் ஒவ்வொரு வருடமும் மேற்காண் அம்சங்களில் சிறந்து விளங்கும் ஒரு பெண் குழந்தை தேர்ந்தெடுக்கப்பட்டு ,<br>1. ஒரு பாராட்டு பத்திரம்<br>2. ரூபாய் ஒரு இலட்சத்திற்கான காசோலை வழங்கப்படும். |
| 3 | தேர்வுக்குழு | மாநில அளவிலான தேர்வுக் குழு மூலம் பரிந்துரைக்கப்பட்ட விண்ணப்பங்களை கூர்ந்தாய்ந்து மேற்காண் விருதினை பெற உரிய நபர் தேர்ந்தெடுக்கப்படுவார். |

| | | |
|---|---|---|
| 4 | விருதிற்கான முன்மொழிகள் , | மேற்காண் விருதினை பெற உரிய முன்மொழிவுகளை முதன்மைக்கல்வி அலுவலர், மாவட்டக் கல்வி அலுவலர், மாவட்ட சமூக அலுவலர், மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர், மாவட்ட திட்ட அலுவலர், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம், காவல்துறை மற்றும் குழந்தைகளுக்காக பணிபுரியும் சிறந்த தொண்டு நிறுவனங்கள் ஆகியோர் பரிந்துரைக்கலாம்.<br><br>பரிந்துரையில் குழந்தையின் பெயர், தாய் / தந்தை பெயர் முகவரி, ஆதார் எண் , புகைப்படம் ஆகியவற்றுடன் குழந்தை ஆற்றிய வீர, தீர செயல் மற்றும் சாதனைகள் ஆகியவற்றின் ஒரு பக்கத்திற்கு மிகாத குறிப்பு மற்றும் அதற்கான ஆதாரங்கள் இணைக்கப்பட வேண்டும். |
| 5 | பரிந்துரைக்கான காலம் | ஒவ்வொரு வருடமும் நவம்பர் 30 ஆம் தேதிக்குள் உரிய பரிந்துரைகள் அனுப்பப்பட வேண்டும். |

எனவே, மேற்கண்ட அறிவுரைகளை பின்பற்றி தலைமை ஆசிரியர்கள் உரிய நடவடிக்கை எடுக்க சுற்றறிக்கை அனுப்புமாறு அனைத்து மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர்கள் / மாவட்டக்கல்வி அலுவலர்களும் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

மேலும், பெண் குழந்தைகள் முன்னேற்றத்திற்காக பாடுபட்டு சாதனை புரிந்த பெண்குழந்தைகளின் பெயரினை தேர்வு செய்து மாவட்ட சமூக நல அலுவலர்களுக்கு பரிந்துரை செய்து அனுப்பிவைத்திட அனைத்து மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர்களுக்கும் தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு:
மேற்குறிப்பிட்ட அரசாணையின் நகல்

பள்ளிக்கல்வி இயக்குநர்

பெறுநர்
அனைத்து மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர்கள்

நகல்

1. அரசு முதன்மைச் செயலாளர்,
   பள்ளிக்கல்வித்துறை,
   தலைமைச் செயலகம், சென்னை–9 – அவர்களின் தகவலுக்காகப் பணிந்து அனுப்பப்படுகிறது.
2. திருமதி வே.அமுதவல்லி, இ.ஆ.ப.,
   சமூக நல ஆணையர்,
   சமூக நல ஆணையரகம்,
   பனகல் மாளிகை, 2வது தளம்,
   சைதாப்பேட்டை, சென்னை–15 – அவர்களின் தகவலுக்காக கனிவுடன் அனுப்பப்படுகிறது.

Commissioner of Social ... Saidapet, Chennai
11 OCT 2018

## சுருக்கம்

சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை – பெண் குழந்தைகளின் சமூக முன்னேற்றத்திற்கு சிறப்பாக பங்காற்றும் 18 வயதிற்குட்பட்ட பெண் குழந்தைகளுக்கு ஒவ்வோர் ஆண்டும் தேசிய பெண் குழந்தை தினமான ஜனவரி 24–இல் விருது வழங்குதல் – 2018–2019ஆம் ஆண்டுக்கான மாநில அரசின் விருது வழங்குவதற்கு ரூ.1,50,000/– நிதி ஒப்பளிப்பு வழங்குதல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

### சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் (சந.5(2) துறை

அரசாணை (ப) எண். 185

நாள்: **09.10.2018**
விளம்பி, புரட்டாசி 23
திருவள்ளுவர் ஆண்டு 2049

படிக்க:

1. அரசு ஆணை (நிலை) எண்.64, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் (சந.5) துறை, நாள் 18.09.2017.
2. அரசு ஆணை (நிலை) எண்.78, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் (சந.5) துறை, நாள் 29.11.2017.
3. அரசு ஆணை (நிலை) எண்.6, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் (சந.5) துறை, நாள் 19.01.2018.

மீண்டும் படிக்க:

4. சமூக நல ஆணையரின் கடித ந.க.எண்.17670/குந–2/2018, நாள் 30.05.2018.

-------

ஆணை:

மாண்புமிகு அமைச்சர் (சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டம்) அவர்களால் சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறையின் 2017–2018ம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையின் போது, கீழ்க்கண்டவாறு அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

> “பெண் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களைத் தடுக்கவும், அனைத்து பெண் குழந்தைகளும் 18 வயது வரை கல்வி கற்றலை உறுதி செய்யவும், பெண் குழந்தை தொழிலாளர் முறையை ஒழிக்கவும், பெண் குழந்தை திருமணங்களைத் தடுக்கவும் பாடுபட்டு, வீரதீர செயல் புரிந்த 18 வயதிற்குட்பட்ட பெண் குழந்தைகளுக்கு தேசிய பெண் குழந்தை தினத்தில் (ஜனவரி 24) பாராட்டு பத்திரமும், ரூபாய் ஒரு இலட்சத்திற்கான காசோலையும் வழங்கி சிறப்பிக்கப்படும்.”

(த.பி.பா.)

2. மேற்காணும் அறிவிப்பின் அடிப்படையில் ஒவ்வோர் ஆண்டும் தேசிய பெண் குழந்தை தினமான ஜனவரி 24-இல் மாநில அரசின் விருது வழங்குவதற்கு அனுமதியும், அதற்கான செலவினமாக விருதுக்கான காசோலை ரூ.1.00 இலட்சமும், பாராட்டு பத்திரம் மற்றும் ஏனைய சில்லறைச் செலவினங்களுக்காக ரூ.25,000/-மும் ஆக மொத்தம் ரூ.1.25,000/- மட்டும் நிதி ஒப்பளிப்பும் வழங்கி மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

3. மேலே இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையில் பெண் குழந்தைகளின் சமூக முன்னேற்றத்திற்கு சிறப்பாக பங்காற்றும் 18 வயதிற்குட்பட்ட பெண் குழந்தைக்கு ஒவ்வோர் ஆண்டும் தேசிய பெண் குழந்தை தினமான ஜனவரி 24 அன்று அரசு விருது வழங்க பரிந்துரைக்கப்பட்ட விண்ணப்பங்களை கூர்ந்தாய்வு செய்து, விருது வழங்குவதற்கு உரிய நபரை தேர்ந்தெடுக்க, கீழ்கண்டவாறு மாநில அளவிலான தேர்வு குழு அமைத்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது:-

| | | | |
|---|---|---|---|
| 1. | மாண்புமிகு அமைச்சர், சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை | - | தலைவர் |
| 2. | அரசு முதன்மைச் செயலர், சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை | - | துணைத் தலைவர் |
| 3. | ஆணையர், சமூக பாதுகாப்புத் துறை | - | உறுப்பினர் |
| 4. | இயக்குநர், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் | - | உறுப்பினர் |
| 5. | இயக்குநர், பள்ளிக் கல்வித் துறை | - | உறுப்பினர் |
| 6. | செயலர், பாலமந்திர் காமராஜ் டிரஸ்ட் | - | உறுப்பினர் |
| 7. | செயலர், துளிர் (Tulir) | - | உறுப்பினர் |
| 8. | இயக்குநர், சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை | - | உறுப்பினர் – செயலர் |

4. மேலே மூன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் பெண் குழந்தைகளின் முன்னேற்றத்திற்காக பாடுபட்ட, சாதனை புரிந்த பெண் குழந்தைக்கு தேசிய பெண் குழந்தை தினமான ஜனவரி 24 அன்று, 2017-2018ஆம் ஆண்டுக்கான மாநில விருது திருவண்ணாமலை மாவட்டத்தைச் சேர்ந்த செல்வி ந. நந்தினி என்பவருக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் பாராட்டு பத்திரமும், ரூபாய் 1.00 இலட்சம் காசோலையும் வழங்குவதற்குரிய ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

(த.பி.பா.)

5. சமூக நல ஆணையர் அவர்கள், மேலே நான்காவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் 2018–2019ஆம் ஆண்டுமீ விருது வழங்குவதை தொடர்வதற்கு, பெண் குழந்தை திருமணங்களைத் தடுத்து அனைத்து பெண் குழந்தைகளும் கல்வி கற்றலை உறுதி செய்ய பாடுபட்டு, வீரதீர செயல் புரிந்த 18 வயதிற்குப்பட்ட பெண் குழந்தைகளுக்கு தேசிய பெண் குழந்தை தினத்தில் (ஜனவரி 24) விருது வழங்க தனது கருத்துருவை பின்வருமாறு அனுப்பியுள்ளார்.

**"பெண் குழந்தை திருமணங்களைத் தடுக்கவும், பெண் குழந்தை முன்னேற்றத்திற்காக பாடுபட்ட, வீரதீர செயல் புரிந்த சாதனை புரிந்த பெண் குழந்தைக்கான மாநில அரசு விருது"**

<u>தகுதிகள்:</u>

1) 5 வயதிற்கு மேல் 18 வயதிற்குட்பட்டபடி (31 டிசம்பர்) தமிழகத்தில் வசிக்கும் பெண் குழந்தை.
2) கீழ்க்கண்டவற்றில் வீர தீர செயல் புரிந்திருக்க வேண்டும்.
   - பெண் கல்வி.
   - பெண் குழந்தை தொழிலாளர் ஒழிப்பு.
   - பெண் குழந்தை திருமணத்தை தடுத்தல்.
   - வேறு ஏதாவது வகையில் சிறப்பான / தனித்துவமான சாதனை செய்திருத்தல்.
   - சமூக அவலங்கள் மற்றும் அதனை தீர்வு காண்பதற்கு புத்தகங்கள் மற்றும் கையேடுகள் எழுதி வெளியிட்டிருத்தல்.
   - ஆண்கள் மட்டுமே சாதிக்க முடியும் என்பது போன்ற செயல்களை பெண்களாலும் சாதிக்க முடியும் என்று சாதித்திருத்தல்.

<u>விருது:</u>

மாநிலத்தில் ஒவ்வொரு வருடமும் மேற்காண் அம்சங்களில் சிறந்து விளங்கும் ஒரு பெண் குழந்தை தேர்ந்தெடுக்கப்பட்டு, ஒரு பாராட்டு பத்திரமும், ரூபாய் ஒரு இலட்சத்திற்கான காசோலையும் வழங்கப்படும்.

<u>தேர்வுக் குழு:</u>

விருதுக்காக பெறப்படும் விண்ணப்பங்களை கூர்ந்தாய்ந்து, மேற்காண் விருதினை பெற உரிய நபரை தேர்ந்தெடுக்கும் பொருட்டு தேர்வுக்குழு அமைத்திட உரிய அனுமதியையும் சமூக நல ஆணையர் அரசை கோரியுள்ளார்.

(த.பி.பா.)

**விருதிற்கான முன்மொழிவுகள்:**

மேற்காண் விருதினை பெற உரிய முன்மொழிவுகளை முதன்மை கல்வி அலுவலர், மாவட்ட கல்வி அலுவலர், மாவட்ட சமூக நல அலுவலர், மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர், மாவட்ட திட்ட அலுவலர், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி பணிகள் திட்டம், காவல்துறை மற்றும் குழந்தைகளுக்காக பணிபுரியும் சிறந்த தொண்டு நிறுவனங்கள் ஆகியோர் பரிந்துரைக்கலாம்.

பரிந்துரையில் குழந்தையின் பெயர், தாய்/தந்தை முகவரி, ஆதார் எண், புகைப்படம் ஆகியவற்றுடன் குழந்தை ஆற்றிய வீர, தீர செயல் மற்றும் சாதனைகள் ஆகியவற்றின் ஒரு பக்கத்திற்கு மிகாத குறிப்பு மற்றும் அதற்கான ஆதாரங்கள் இணைக்கப்படவேண்டும்.

பரிந்துரைக் காலம்: ஒவ்வொரு வருடமும் நவம்பர் 30ஆம் தேதிக்குள் உரிய பரிந்துரைகள் பெற வேண்டும்.

**மேற்காண் விருதினை வழங்க கீழ்க்கண்ட இனங்களுக்கு நிதி ஒதுக்கீடு தேவைப்படும்:-**

1. விருது காசோலை
2. பாராட்டு பத்திரம் தயார் செய்ய செலவினம்
3. எதிர்பாரா செலவினம்

6. எனவே, பெண் குழந்தைகள் முன்னேற்றத்திற்கு பாடுபட்ட, சாதனை பெண் குழந்தைகளுக்கான மாநில அரசு விருதினை 2018–2019ஆம் ஆண்டு ஜனவரி 24 தேசிய பெண் குழந்தைகள் தினத்தன்று வழங்கவும், அதற்கான செலவினமாக ரூ.2,00,000/–ஐ நிதி ஒதுக்கீடு செய்தும் உரிய ஆணை வழங்குமாறும் சமூக நல ஆணையர் அரசைக் கோரியுள்ளார்.

7. சமூக நல ஆணையரின் கருத்துருவை அரசு கவனமாக பரிசீலித்து, அதனை ஏற்று, பின்வருமாறு ஆணைகள் வெளியிடுகிறது:-

(அ) 2017–2018 ஆம் ஆண்டில் அரசாணை (நிலை) எண்.78, சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் (சந.5–2)த் துறை நாள் 29.11.2017–ன் வாயிலாக அமைக்கப்பட்ட தேர்வுக் குழுவே ஒவ்வோர் ஆண்டும் பெண் குழந்தைகளின் சமூக முற்னேற்றத்திற்கு சிறப்பாக பங்காற்றும் 18 வயதிற்குப்பட்ட பெண் குழந்தைகளில் விருது வழங்குவதற்கு தகுதியானவரை தேர்ந்தெடுக்கும் பணியை மேற்கொள்ளும்.

(ஆ) 2018–2019 ஆம் ஆண்டில் பெண் குழந்தைகளின் சமூக முன்னேற்றத்திற்கு சிறப்பாக பங்காற்றும் 18 வயதிற்குட்பட்ட பெண் குழந்தை ஒருவருக்கு தேசிய பெண் குழந்தை தினமான 2019 ஆம் ஆண்டு ஜனவரி 24–இல் மாநில அரசின் விருது வழங்குவதற்கு சமூக நல ஆணையருக்கு உரிய அனுமதியும் விருதுக்கான காசோலை, பாராட்டு பத்திரம் தயார் செய்தல் மற்றும் ஏனைய சில்லரைச் செலவினம் ஆகியவற்றுக்கு ரூ.1,50,000/– (ரூபாய் ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) நிதியும் ஒப்பளிப்பு செய்யப்படுகிறது.

(த.பி.பா.)

8. மேலே பத்தி–7 இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

"2235 – சமூக பாதுகாப்பும் நலனும் – 02 சமூக நலன் 001 – நெறிப்படுத்தலும் நிருவாகமும் – மாநிலச் செலவினங்கள் – AA – சமூக நல இயக்ககம் – 59 பரிசுகளும், வெகுமதிகளும்" (த.தொ.கு 2235 – 02 – 001 – AA – 5906)

9. மேலே பத்தி 7ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட கூடுதல் செலவினம் ரூ.1,50,000/–ஐ 2018–2019 ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். அவ்வாறு நிதியொதுக்கம் செய்யப்படுவதை எதிர்நோக்கி மேற்கண்ட செலவினத்தை மேற்கொள்ள சமூக நல ஆணையருக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. மேலும், இச்செலவினத் தொகையை 2018–2019ம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்க கருத்துருவினை நிதி (சமூக நலம்) துறைக்கு அனுப்பும்போது தவறாது சேர்க்குமாறு சமூக நல ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

10. இவ்வரசாணையானது நிதித்துறையின் இசைவுடன், அதன் அலுவல் சார்பற்ற எண்.49408/நிதி(சந)/2018, நாள் 09.10.2018 மற்றும் கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண். 1482 (ஆயிரத்து நானூற்று எண்பத்து இரண்டு) ன் படி வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

க. மணிவாசன்
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
சமூக நல ஆணையர், சென்னை–600 015
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை–600 005
இருப்பிட தணிக்கை அலுவலர், சென்னை– 600 009
முதன்மை மாநிலக் கணக்காயர் அலுவலகம் (G&SSA), சென்னை–600 018.
மாநிலக் கணக்காயர், சென்னை– 600 018

<u>நகல்</u>
மாண்புமிகு அமைச்சர் (சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டம்) அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை - 600 009.
சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை முதன்மைச் செயலாளர் அவர்களின் முதுநிலை முதன்மைச் தனிச் செயலர், சென்னை –9
சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் (சந. 2) துறை, சென்னை - 600 009.
நிதித் (சமூக நலம் / வரவு செலவு, பொது.II) துறை, சென்னை–600 009.
இருப்புக்கோப்பு / உபரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

3/3 பா.ஜொரால்டு ஜெரால்ட்
அரசு சார்புச் செயலாளர்.

10.10.18
அரசு சார்புச் செயலாளர்,
சமூக நலம் (ம) சத்துணவுத் திட்டத்துறை,
தலைமைச் செயலகம், சென்னை–600 009